## SSF வழிகாட்டுதல்கள் நிகழ்வுப் போக்கு பற்றிய கூடுதல் தகவல்களை எங்கிருந்து பெறலாம்?

பின்வரும் FAOவின் வலைமனையிலிருந்து தகவல் பெறலாம்:

http://wwww.fao.org/fishery/ssf/guidelines/en

பின்வரும் CSO வலைமனைகளிலும் தகவல்கள் கிடைக்கும்:

https://sites.google.com/site/smallscalefisheries/ மற்றும் http://igssf.icsf.net/




# SSF வழிகாட்டுதல்கள்

**உணவுப் பாதுகாப்பு**

**மற்றும்**

**வறுமை ஒழிப்பு**

**என்ற சூழமைவில்,**

**நிலைத்தன்மையுள்ள**

**சிறுவீத மீன்பிடியை**

**உறுதி செய்வதற்கான**

**தன்னார்வ**

**வழிகாட்டுதல்கள்**



## SSF வழிகாட்டுதல்கள் யாவை?

உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்ற சூழமைவில் நிலைத்தன்மையுள்ள சிறுவீத மீன்பிடியை உறுதி செய்வதற்கான தன்னார்வ வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்கான நிகழ்வுப் போக்கை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) முன்னெடுத்து வருகிறது. இது 1995ஆம் ஆண்டின் FAO பொருப்பேற்பு மீன்பிடி நன்னடத்தையின் விதித்தொகுப்பின் (Code of Conduct for Responsible Fisheries - CCRF) ஒரு கூறாக அமையும்.

தாய்லாந்தின் பாங்காக்கில் 2008ல் நடைபெற்ற சிறுவீத மீன்பிடி பற்றிய உலக மாநாட்டினைத் தொடர்ந்து (இதனை பாங்காக் மாநாடு என்று குறிப்பிடுவர்), பிப்ரவரி 2011ல் FAOவின் மீன்பிடிக்கான கமிட்டி (Committee on Fisheries - COFI)யின் 29வது அமர்வின்போது SSF வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

சிறுவீத மீன் பிடியின் முக்கியத்துவம் பொதுவாக அங்கீகரிக்கப்படுவதில்லை என்றும் சிறுவீத மீன்பிடி மற்றும் அதனைச் சார்ந்துள்ள சமூகங்களுக்கு உரிய கவனம் அளிக்கப் படுவதில்லை என்றும் COFI குறிப்பிட்டது.

சிறுவீத மீன்பிடியின் முக்கியத்துவத்தைப் பரவலாக புரிந்துகொள்ள வைப்பதாலும், அங்கீகரிக்க வைப்பதாலும், மனித உரிமை அடிப்படையிலான அணுகுமுறையை மேம்படுத்துவதாலும் முன்னதாகவே முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ள சிறுவீத மீன்பிடியின் பாத்திரத்தை மேம்படுத்துவதையும், பட்டினியையும் வறுமையையும் ஒழிப்பதற்கான உலகளாவிய மற்றும் தேசிய முயற்சிகளுக்கு அது அளிக்கும் பங்களிப்பை மேம்படுத்துவதையும் SSF வழிகாட்டுதல்கள் இலக்காகக் கொண்டுள்ளன.



## SSF வழிகாட்டுதல்கள் எப்படி உருவாக்கப்படுகின்றன? இந்த நிகழ்வுப்போக்கில் சிவில் சொசைட்டி அமைப்புகள் பங்கெடுக்கின்றனவா?

சிவில் சொசைட்டிகள் (சிறுவீத மீன்பிடியில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களை உள்ளடக்கிய CSOக்கள்), அரசுகள், பிராந்திய அமைப்புகள், சம்பந்தப்பட்ட பிறரையும் கலந்தலோசித்து SSF வழிகாட்டுதல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

முதல் தொழில்நுட்ப கலந்தாலோசனை மே 2013ல் நடந்தது. இரண்டாவது அமர்வு பிப்ரவரி 2014ல் நடைபெற இருக்கிறது. தொழில்நுட்ப கலந்தாலோசனைக்கு முன்பு, பேச்சுவார்த்தைக்கான SSF முன்வரைவு வழிகாட்டுதல்களை வளர்த்தெடுப்பதற்கான பல கலந்தாலோசனைகளை FAOவும், அரசுகளும் பிற அமைப்புகளும் நடத்திவருகின்றன.

2008 பாங்காக் மாநாடு முதலே CSOக்கள் SSF வழிகாட்டுதல்களை வளர்த்தெடுக்கும் நிகழ்வுப் போக்கில் முனைப்பாக ஈடுபட்டு வந்தன. ஆசியா, ஆப்பிரிக்கா, மற்றும் லத்தீன் அமெரிக்காவில் 20 தேசிய அளவிலான பட்டறைகளையும், ஆப்பிரிக்காவில் இரண்டு பிராந்திய அளவிலான பட்டறைகளையும் இத்துடன் ஐரோப்பிய யூனியன் மற்றும் கனடாவில் ஆண் மற்றும் பெண் மீனவர் என பல நூறு பேர்கள் கலந்துகொண்ட கலந்தாலோசனைக் கூட்டங்களை சிறுவீத மீனவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்கள் மத்தியிலும் நடத்தியிருந்தன. அவர்களின் ஆதர்சனங்களும் முன்வைப்புகளும் SSF வழிகாட்டுதல்களை வளர்த்தெடுக்கும் நிகழ்வுப் போக்கில் உள்வாங்கிக் கொள்ளப்பட்டன. மீன் பிடிப்பவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்களின் உலகக் கூட்டமைப்பு (World Forum of Fish Harvesters and Fishworkers - WFF), மீனவ மக்களுக்கான உலக அமைப்பு (World Forum of Fisher Peoples - WFFP), மீன் தொழிலாளர்களுக்கு ஆதரவான சர்வதேச கூட்டாண்மை (International Collective in Support of Fishworkers - ICSF), உணவு இறையாண்மைக்கான சர்வதேச திட்டமிடல் குழு (International Planning Committee on Food Sovereignty - IPC) ஆகியவை ஒருங்கிணைந்த பொதுமேடையின் முயற்சியினால் மேற்சொல்லப்பட்ட வகையில் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டன.

## CSOக்கள் SSF வழிகாட்டுதல்கள் மீது ஆர்வம் காட்டுவதேன்?

ஓரங்கட்டப்பட்டுள்ள சிறுவீத மீன்பிடிப்புத்துறையை மீட்டெடுப்பதற்கான கொள்கை வெளியை உருவாக்குவதற்கான வாய்ப்பை அளிப்பதற்கான ஆற்றல் வழிகாட்டு நெறிகளுக்கு இருக்கின்றன என CSOக்கள் நம்புகின்றன.

இதுபோன்றதொரு வழிகாட்டுதல்கள் வேண்டும் என்று CSOக்கள் வெகு காலமாகக் கோரி வந்தன. சிறுவீத மீன்பிடி மிக முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பு செய்துவந்த போதும், முடிவெடுப்பதில் இருந்து ஒதுக்கிவைத்தல், தொழிற்சாலைக் கப்பல்கள் மிகையாக மீன்பிடிப்பது, மீன்பிடிக்காக அவர்களின் உரிமையையும் நிலத்தையும் பறிப்பது, வறுமை, கடல் வெளியைப் பயன்படுத்துவதில் எதிரெதிப் போக்குகளால் ஏற்படும் போட்டி அடிப்படைவசதிகள் கூட இல்லா நிலை போன்ற பிரும்மாண்டமான சவால்களை அவர்கள் சந்திக்கின்றனர் என்பதை CSOக்கள் சுட்டிக்காட்டி வந்தன. சிறுவீத மீன்பிடிக்கு, கூடுதல் கவனத்தையும் கூடுதல் ஆதரவையும் கோருவதற்கும் வழிகாட்டுதல்கள் பயனுள்ள கருவியாக இருக்கும் என்று CSOக்கள் கருதின.

## SSF வழிகாட்டுதல்கள் எப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்?

FAOவின் உறுப்பு நாடுகள் SSF வழிகாட்டுதல்கள் பற்றி இன்னமும் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றன. இந்த நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தும் வாசகம் 2014 ஜூனில் நடைபெறவுள்ள COFஐ-ன் 31வது அமர்வில் ஏற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு, அவை முறையாக நடைமுறைபடுத்துவதை உறுதி செய்வது நாடுகளின் அரசு மற்றும் CSOக்கள் பிற உரிமை கோரும் பிரிவினர், ஆர்வமுள்ள பிரிவினரைச் சார்ந்ததாகும்.

## SSF வழிகாட்டுதல்கள் தன்னார்வத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதால், அவை ஏற்றுக்கொள்ளபட்ட பின்பு சிறுவீத மீன்பிடிக்கு என்ன மாற்றத்தை அவை கொண்டுவரும்?

SSF வழிகாட்டுதல்கள் ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால் அவை முறையாக நடைமுறைபடுத்தப்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு, இது, அரசுகள், நன்கொடையாளர்கள், சிறுவீத மீனவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்கள் அத்துடன் இதர சம்பந்தப்பட்ட பிரிவினரின் கூட்டுப் பொறுப்பாகும். SSF வழிகாட்டுதலில் உள்ள முன்வைப்புகளுடன் கொள்கைகளும், சட்டங்களும் திட்டங்களும் ஒத்துப்போவதை உறுதி செய்வதற்காக சிறுவீத தொழிலாளர்கள், சிறுவீத மீனவர்கள் தங்கள் அரசுடன் சேர்ந்து பணி செய்தாக வேண்டும். அரசின் பல்வேறு துறைகள் மேலும், மீன்பிடியில் உள்ள உரிமைகோரும் பிரிவினர் மட்டுமல்லாமல், சிறுவீத மீன்பிடியுடன் தொடர்புள்ள இதர விரிவினரும் கூட தங்களுக்குள் ஒருங்கிணைந்து செயல்படுவதையும் துடிப்புடன் செயல்படுவதையும் இது கோருகிறது.

